## கர்த்தரின் வார்த்தைகள்

**சங்கீதம் 12:6**

'கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்-

கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது'.

அன்பானவர்களே, தேவனுடைய வார்த்தைகள் ஜீவனுள்ளதும், வல்லமையானதும், பரிசுத்த-மானதும், படைப்பின் ஆதாரமாகவுமுள்ளது. அப்படிப்பட்ட விசேஷம் நிரம்பிய வார்த்தைகள் எதற்காக புடமிடப்பட வேண்டும். சற்றே சிந்திப்போம். பரிசுத்தமான நமது தந்தை பேசிய, பேசுகின்ற வார்த்தைகள், பரிசுத்தமானதாகத்தான் இருக்கும்; பிறகு எந்த காரணத்திற்காக புடமிட-ப்பட வேண்டும்.

**நாம் மண் என்று நினைவு கூறும் தேவாதி தேவன், நமக்கு சொல்லும் அறிவுரைதான் என்ன?**

தேவனுடைய வார்த்தைகளை, நமது உள்ளமென்னும் மண்குகையிலே, மனமென்ற பாத்தி-ரத்திலிட்டு, நன்றாக உருக்க (தியானம்) வேண்டும் என்பது தேவ சித்தமாக இருக்கின்றது.

**எதற்காக?**

தேவ சாயலை உருவாக்குவதற்காகத்தான்; இதுதான் புடமிடுதல். வெள்ளி என்பது, தியாகத்தை குறிப்பதாக உள்ளது; அதாவது பலியை குறிக்கின்றது. நமது கர்த்தராகிய கிறிஸ்து, 30 வெள்ளிக்காசுக்காக விற்கப்பட்ட ஒரு பாவநிவாரண பலியாக காணப்படுகின்றார். அவரது சிலுவையை பின்பற்றி செல்லும் நாம், அவரை அறியாத மக்கள் மத்தியிலே, சாட்சி பலியாக நிலைநிற்பதற்கு, தேவாதி தேவனின் வார்த்தைகள் நம் உள்ளத்தை உருக்கி (தியானித்தல்), புடமிட வேண்டும் (தேவ சாயலை உருவாக்குதல்). வெள்ளியை உருக்கும் போது, அதை எந்தவடிவத்திலும் வார்ப்பிக்க முடியும். அதுபோலவே, தேவ வசனங்களை நாம் அநுதினம் தியானிக்கும் போது, அவை உள்ளத்தை, மனதை புடமிட்டு, நாம் பேசும் சொற்களை சுத்தப்படுத்தி, செயல்களை (ஏழுதரம் - ஏழு நாட்களும்) தேவனுக்கு உகந்ததாக வெளிப்படுத்துகின்றது.

ஆமென்,

அல்லேலுயா.